ஷேர் ஆட்டோ, டாக்சி சேவையால்

# ஒரு மாதத்தில் 45 ஆயிரம் பேர் பயன்

## மெட்ரோ ரயில் நிர்வாகம் தகவல்

சென்னை, ஆக 9: ஷேர் டாக்சி மற்றும் ஷேர் ஆட்டோ சேவையால் கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் 44,974 பேர் பயன்பெற்றுள்ளனர் என மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மெட்ரோ ரயில் நிர்வாகம் வெளியிட்ட அறிக்கை:

சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம், பயணிகளின் வசதிகளுக்கு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட மெட்ரோ ரயில் நிலையங்களில் ₹5 கட்டணத்தில் ஷேர் ஆட்டோ சேவையும், ₹10 கட்டணத்தில் ஷேர் டாக்சி சேவையையும் செயல்படுத்தி வருகிறது.

அதன்படி, கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் இந்த மெட்ரோ ரயில் நிலையங்களில் 44 அயிரத்து 974 பயணிகள் இந்த ஷேர் டாக்சி மற்றும் ஆட்டோ வசதிகளை பயன்படுத்தியுள்ளனர். கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் கடந்த ஜூலை மாதம் வரை சுமார் 4 லட்சத்து 40 ஆயிரத்து 87 பேர் இந்த ஷேர் ஆட்டோ மற்றும் ஷேர் டாக்சி சேவைகளை பயன்படுத்தியுள்ளனர்.

இதேபோல், இந்த சேவை விரைவில் மீதம் உள்ள அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.